அரசியல் சிந்தனை நூல் வரிசை

19

# புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை

சி.அ. யோதிலிங்கம்

Rs.30/=

வெளியீடு
சமூக விஞ்ஞான ஆய்வு மையம்

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மாதம் தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல் வரிசையில் 19வது நூலாக சி.அ.யோதிலிங்கம் எழுதிய "புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை" என்ற இச் சிறு நூல் வெளிவருகின்றது. அரசியல் கலாச்சாரம் பற்றிய சிந்தனை பலவீனமாக இருக்கின்ற தமிழ்ச் சூழலில் இச் சிறு நூல் அது பற்றிய உரையாடலை ஆரம்பிப்பதற்கான ஊக்குவிப்பை வழங்கும் என நம்புகிறோம்.

அரசியல் கலாச்சாரம் என்பது அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் அரசியல் பிராணிகள் என்ற வகையில் மக்களின் நடத்தைகளின் ஊடாக வெளிப்படும் அரசியல் விழுமியங்களாகும். மக்களின் உயர்ந்த மட்ட அரசியல் அறிவு, மக்கள் பங்கேற்பு அரசியல் என்பன உயர்வாக இருக்கும் போதே அரசியல் கலாச்சாரமும் உயர்வாக இருக்கும்.

தமிழ் மக்கள் மத்தியில் யாழ், சைவ, வேளாள ஆண் ஆதிக்க சித்தாந்தம், மேல் நிலையில் நிற்றல், அதிகாரப் படி நிலைச் சமூகமாக இருத்தல், அக முரண்பாடுகள் தொடர்ந்தும் இருத்தல். ஜனநாயக விழுமியங்களின் போதாமை, மக்கள் பங்கேற்பு அரசியல் பலவீனமாக இருத்தல், அரசியல் இயக்கங்கள் ஜனநாயகக் கட்டமைப்பைக் கொண்டிராமை, ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாமை, புவிசார் அரசியலை விளங்காமை, தமிழ்த்தேசிய அரசியலின் சர்வதேச பரிமாணத்தை விளங்காமை ஆகிய காரணங்களினால் அரசியல் கலாச்சாரமும் கீழ் மட்டத்திலேயே உள்ளது. இந்தப் போக்கில் பண்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தாமல் தமிழ் அரசியல் முன்னோக்கி நகர முடியாது.

இச் சிறுநூல் கொள்கை அரசியல், ஒன்றிணைந்த அரசியல், ஐக்கிய முன்னணி தந்திரோபாயம், புவிசார் அரசியல், அக முரண்பாடுகள், சர்வதேச பிராந்திய அரசியல், மக்கள் பங்கேற்பு அரசியல் என்பவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. இதன் மூலம் பேசாப் பொருளை பேச முற்படுகின்றது.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவு போல இதற்கும் தருமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி!

சமூக விஞ்ஞான ஆய்வு மையம்.
28, செம்மணி வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

# புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை

சி.அ. ஜோதிலிங்கம்

தமிழ் கட்சிகளுக்கிடையேயான முரண்பாடு களினாலும், தமிழ்த்தேசிய அரசியல் நலன்களை நிராகரித்து கட்சி அரசியலுக்கும், தேர்தல் அரசியலுக்கும் முன்னுரிமை கொடுப்பதனாலும், கட்சித்தலைவர்களின் சுயநலப் போக்குகளினாலும், தமிழ்த் தேசிய அரசியல் இன்று தேக்கமடையத் தொடங்கியுள்ளது. தேக்கமடையும் நீர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் நாற்றமடையத் தொடங்குவது போல தமிழ்த் தேசிய அரசியலும் நாறத் தொடங்கியுள்ளது. கட்சிகளுக்கிடையே ஒரு ஆரோக்கிமான தலையீட்டை செய்வதற்கு வலிமையான சிவில் சமூகத்தளமும் நடைமுறையில் இல்லை. ஓரளவிற்கு சிவில் சமூகத் தளமாக இருந்த தமிழ் மக்கள் பேரவையும் கட்சி அரசியலினால் சீரழிந்து சிதைந்து போயுள்ளது. சில ஆரோக்கியமான முன்னெடுப்புக்களைச் செய்த சுயாதீனக் குழுவும் சோர்வுற்றுள்ளது. இந்தப் போக்கினைத் தொடர அனுமதிக்க முடியாது மாற்றியேயாக வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் புதிய அரசியல் கலாச்சாரத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

இன்றைய நிலை, அதனை இயக்கும் விதிகள், மாற்றங்களை எப்படி மேற்கொள்வது? என்பவை தொடர்பாக கருத்துருவாக்கிகள் பரந்துபட்ட உரையாடலை ஆரம்பிப்பது அவசியமாகும். கட்சி அரசியலுக்கு அப்பால் காய்தல், உவத்தல் அற்ற உரையாடலாக இதனை முன்கொண்டு செல்ல வேண்டும். பல வினாக்களை உருவாக்கி அதற்கு விடை தேடுகின்ற அணுகு முறையை பின்பற்றுவது அதிக விளைவுகளை தரக் கூடியதாக இருக்கும்.

முதலாவது வினா இன்றைய அரசியல் சூழல் எப்படிப்பட்டது? என்பதாகும். ரணில் – மைத்திரி அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது இருந்த சூழல் அல்ல தற்போது இருப்பது. முற்றிலும் மாறுபட்ட சூழல். பெருந்தேசிய வாதத்தின் லிபறல் முகம் முற்றாக ஒதுக்கப்பட்டு இனவாத முகம் ஆட்சியிலுள்ளது. எதிர்க்கட்சியிலும் லிபறல் வாதிகள் ஒதுக்கப்பட்டு இனவாத முகமே தலைமைக்கு வந்துள்ளது. சுருக்கமாகக் கூறின் ஆளும் கட்சியும் இனவாத முகம், எதிர்க்கட்சியும் இனவாத முகம், இரண்டு இனவாத முகங்களும் இணைந்து தென்னிலங்கை

அரசியலை பாசிச நிலைக்கு கொண்டு சென்றுள்ளன. தமிழ் தேசிய அரசியல் இந்தப் பாசிச நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

மறுபக்கத்தில் இலங்கைத்தீவை மையமாகக் கொண்ட பூகோள அரசியல் போட்டி உச்ச நிலைக்கு சென்றுள்ளது. இலங்கைத் தீவில் அக்கறை கொண்ட வல்லரசுகள் எப்படியாவது இலங்கைத்தீவில் கால்பதிக்க முனைகின்றன. இந்தியாவிற்கு கேந்திர முக்கியத் துவத்திற்கு அப்பால் தேசிய பாதுகாப்பும் பிரச்சினையும் இருப்பதனால் அது அதிக முனைப்புடன் கால் பதிக்க முனைகின்றது. அமெரிக்க - இந்திய - மேற்குலக் கூட்டு இந்தோ - பசுபிக் மூலோபாயத்திட்டத்துடனும், சீனா பட்டுப்பாதை திட்டத்துடனும் இப் பிராந்நியத்தில் ஆதிக்கம் செலுத்த முனைகின்றன. கண்ணுக்குள் எண்ணெய் விட்டது போல இலங்கைத்தீவின் சிறிய சிறிய அரசியல் அசைவுகளைக் கூட அவதானித்துக்கொண்டிருக்கின்றன. இந்த நிலை முன்னெப் போதையும் விட சர்வதேச நிகழ்ச்சி நிரலிற்குள் இலங்கைத்தீவினை இழுத்து விட்டுள்ளது. இனி சர்வதேச நிகழ்ச்சி நிரல் செல்லும் இடமெல்லாம் இலங்கையும் இழுபட்டு செல்ல வேண்டும். கொரோனாவிற்கு பிறகு இப்போக்கு மேலும் அதிகமாகலாம். கோத்தா அரசாங்கம் தன் இருப்பிற்கு சீனாவையே முழுவதுமாக நம்பியுள்ளது. சர்வதேச இருப்புக்கு மட்டுமல்ல உள்நாட்டு இருப்புக்கும் சீனாவை நோக்கி நகரவேண்டிய நிர்ப்பந்தத்தில் அது உள்ளது. எனவே கோத்தா அரசாங்கம் விரும்பினாலென்ன? விரும்பாவிட்டாலென்ன சீனசார்பு நிலையையே எடுக்க வேண்டியுள்ளது. இதனை அமெரிக்கா - இந்தியா - மேற்குலக தரப்பு ஒருபோதும் சகித்துக்கொள்ளாது. அதுவும் இந்தியாவிற்கு வாசல் படிப்பிரச்சினையாக இருப்பதால் அது ஒரு படி கூடவே செயற்பட முயற்சிக்கும். இந்தியாவிற்கு வாலையும் சீனாவிற்கு தலையையும் காட்டும் இராஜதந்திரம் இனிவரும் காலத்தில் எடுபடப்போவதில்லை கொரோனா மூலம் சீனாவை தனிமைப் படுத்தலாம் என நினைத்த மேற்குலகம் விழிபிதுங்கி நிற்கின்றது.

இந்தப் போக்கினால் தமிழ் அரசியலும் சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் இழுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தீவில் தமிழர் தாயகமும் கேந்திர இடத்தில் இருக்கின்றது. தமிழ் நாட்டின் கேந்திர நிலையையும் இணைத்துப் பார்க்கின்ற போது தமிழ் மக்களின் கேந்திரப்பலம் இரட்டிப்பானது. இதைவிட பெரும்தேசிய அரசியல் ஆதிக்கத்திற்கு

வெளியில் சுயாதீனப்பலத்துடன் நிற்பவர்கள் தமிழ் மக்கள்தான். ஏனையதரப்புக்கள் அனைத்தும் பெரும்தேசிய ஆதிக்கத்திற்கு புவிப்பரப்பாலும், சமூக அமைப்பாலும் கட்டுப்பட்டவை. எனவே தமிழ் மக்களை இணைத்துக் கொள்வதன் மூலம் தான் அமெரிக்க - இந்திய மேற்குலக சக்திகளினால் இலங்கையில் தலையீடு செய்யமுடியும். இவ்வளவு காலமும் இந்த அணியுடன் ஒத்துழைத்த ரணில் தலைமையிலான பெரும் தேசியவாதத்தின் லிபரல் தரப்பு இன்று முழுமையாகவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது தவிர பெருந்தேசிய வாதம் மேல் நிலைக்கு வரும் போது அதனிடம் முழுமையாக சரணாகதி அடைவதே இந்த லிபரல் தரப்பின் வரலாறு. எனவே அத்தரப்பிடமிருந்து ஒத்துழைப்புக்கள் எதுவும அமெரிக்க - இந்திய - மேற்குலக கூட்டிற்கு தற்போதைக்கு கிடைக்கப் போவதில்லை.

இப்போது இலங்கைத்தீவினை மையமாகக் கொண்ட புவிசார் அரசியல் போட்டியில் தமிழ் மக்கள் தவிர்க்க முடியாத பங்காளிகள். இந்தப் பங்காண்மை ரணில் - மைத்திரி அரசாங்க காலத்தில் முடக்கி வைக்கப்பட்டாலும் இன்று தவிர்க்க முடியாமல் மேற்கிழம்பியுள்ளது. இதனால் சர்வதேச அரசியலைக் கையாள வேண்டிய கட்டாய நிலையும் தமிழ் அரசியலுக்கு உள்ளது.

இரண்டாவது கேள்வி இந்த அரசியல் சூழலை ஒட்டியே எழுகின்றது. மேற்கூறியவை தான் புதிய அரசியல் சூழல் என்றால் பழைய மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் கொண்டு புதிய சூழலை அணுக முடியாது. புதிய மூலோபாயங்களும் தந்திரோபாயங்களும் தேவை. இந்த வகையில் எழும் கேள்வி தமிழ் மக்களுக்கு இன்றைய சூழலில் தேவையானது ஒன்றிணைந்த அரசியலா? மாற்று அரசியலா?

ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் கூட்டமைப்பு இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலை செய்தது. கூட்டமைப்பக்கு பின்னால் நின்று செயற்படுத்திய அமெரிக்க - இந்திய - மேற்குலகக் கூட்டும் அதனையே வற்புறுத்தியது. அந்த அணுகு முறை தமிழ்த் தேசிய அரசியலை செங்குத்தாக கீழிறக்கியது. இது தமிழ்த் தேசிய அரசியலை புற ரீதியாக மட்டுமல்ல அக ரீதியாகவும் வெகுவாக சிதைத்தது. இந்த நிலையில் தமிழ்த் தேசிய அரசியலை பாதுகாப்பதற்கு

மாற்று அரசியல் தேவைப்பட்டது. கஜேந்திரகுமாரும் அவரைத் தொடர்ந்து விக்னேஸ்வரனும் அதனை முன்னெடுத்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் பேரவை என்பனவும் உருவாகின.

இன்று அவ் அரசியல் சூழல் முற்றாக மாறியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கெஞ்சிக் கூத்தாடினாலும் கோத்தா அரசு இணக்க அரசியலுக்கு வரப் போவதில்லை. மறுபக்கத்தில் இணக்க அரசியலுக்கு செல்லுமாறு கூட்டமைப்புக்கு பின்னாலுள்ள இந்திய அமெரிக்க கூட்டும் வலியுறுத்தப் போவதில்லை. கொஞ்சி விளையாடுவதற்கு ரணிலும் மேல் நிலையில் இல்லை. சுமந்திரனின் அண்மைக்கால வீராவேச பேச்சுக்களுக்கு தேர்தல் காய்ச்சலுக்கு அப்பால் இந்த யதார்த்தமும் பிரதான காரணமாகும்.

மறுபக்கத்தில் முன்னர் கூறியது போல தென்னிலங்கையில் இறுகிப்போன பேரினவாத யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டும். சர்வதேச அரசியலைக் கையாள வேண்டும். அதன் வழி பூகோள அரசியலில் பங்காளராக மாற வேண்டும். தனித்தனி பிரிவுகளாக இருந்து கொண்டு இவ் யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க முடியாது. தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், கருத்துருவாக்கிகள், ஊடகவியலாளர்கள், சேமிப்புச் சக்திகள், நட்புச்சக்திகள் என அனைத்துத் தரப்பினரும் ஒரு குடையின் கீழ் அணி திரள்வதன் மூலமே மேற்கூறிய யதார்த்தத்திற்கு முகம் கொடுக்க முடியும். அரசியல் கட்சிகள், கட்சி விளையாட்டுக்களை நடாத்துவதற்கு இது பொருத்தமான காலம் அல்ல, இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட பின் வேண்டுமானால் அவர்கள் கட்சி விளையாட்டுக்களை நடாத்தட்டும். இது விடயத்தில் பொறுப்பற்ற கூத்தாடிகளாக கட்சிகள் நடந்து கொள்வதற்கு அனுமதிக்க முடியாது.

எனவே இன்று தேவையானது மாற்று அரசியலல்ல. ஒன்றிணைந்த அரசியலே. இதற்கு முதலில் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் ஐக்கிய முன்னணியாக ஒன்றிணைய வேண்டும். அவை அதற்கு இணையாவிட்டால் மக்கள் செவியில் பிடித்துக் கொண்டு வந்து ஒன்றிணைக்க வேண்டும். மறுபக்கத்தில் மக்கள் அமைப்புகளையும் ஒரு ஐக்கிய முன்ணணியாக இணைக்க வேண்டும். இவ்விரண்டு ஐக்கிய முன்னணிகளுடன் சேமிப்புச்சக்திகளாக உள்ள

உலகத் தமிழர்களையும், நட்புச்சக்திகளாக உள்ள உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் ஒன்றிணைத்த மாபெரும் தேசியப் பேரியக்கமாக எழுச்சியடைய வேண்டும். இவ்வாறு எழுச்சியடைந்தால் கோத்தா மட்டுமல்ல அமெரிக்க ஜனாதிபதி வந்தாலும் கூட தமிழ் மக்களை எதுவும் செய்ய முடியாது.

தமிழ்த்தேசிய அரசியலை கட்சிகளின் பொறுப்பில் ஒரு போதும் விட்டு விட முடியாது. அவை தேர்தல் இலக்கையே மையமாகக் கொண்டு செயற்படுபவை. தமிழ்த் தேசிய வேலைத்திட்டங்களை வினைத்திறனுடன் ஒரு போதும் முன்னெடுக்க மாட்டாது. அரசியல் செயற்பாடு என வருகின்ற போது தேர்தல் ஒரு பகுதி மட்டும் தான். மிகப் பெரும்பரப்பு தேர்தல் அரசியலுக்கு வெளியிலேயே உள்ளது. தமிழ் மக்களின் அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவிய வகையில் கையாள வேண்டிய மாபெரும் பொறுப்பு உள்ளது. தேர்தல் அரசியலினால் தமிழ்த்தேசியத்திற்கு கிடைக்கப் போகின்ற பயன்கள் மிகச் சொற்பமே! மக்கள் அங்கீகாரம், பாராளுமன்றத்தை ஒரு மேடையாக பயன்படுத்தல் என்பதற்கு அப்பால் இவை எவற்றையும் சாதிக்கப் போவதில்லை. தவிர முரண்பாடுகள் தேர்தல் அரசியலில் அதிகமாக இருக்கும். இது தமிழ் மக்களின் ஐக்கியத்தை அகரீதியாகச் சிதைக்கப்பார்க்கும். எனவே இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு தேசியப் பேரியக்கமே இன்று அவசியமானது.

ஒன்றிணைவு அரசியலைத் தான் முன்னெடுப்பதென்றால் அந்த ஒன்றிணைவு கொள்கைக்கான ஒன்றிணைவா? தேர்தலுக்கான ஒன்றிணைவா? என்ற மூன்றாவது கேள்வி எழுகின்றது. இனப்பிரச்சினை தீரும் வரை கொள்கைக்கான ஒன்றிணைவே தமிழ் அரசியலுக்குத் தேவை. இங்கு கொள்கை மட்டுமல்ல கொள்கை அடிப்படையிலான அரசியல் இலக்கிலும் அதனை அடைவதற்கான வழி வரைபடத்திலும் உடன்பாடு தேவை. அரசியல் இலக்கினைப் பொறுத்தவரை கோட்பாட்டு அடிப்படையில் தேசம் இறைமை, சுயநிர்ணயம், சுயநிர்ணயத்தை அடைவதற்கான ஆட்சிப்பொறிமுறை என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். யாப்பு சட்ட அடிப்படையில் தாயக ஒருமைப்பாடு சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்கள், கூட்டு அதிகாரத்தில் தேசிய இனமாக பங்கு பற்றுவதற்கான பொறிமுறை, அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வழிவரைபடத்தைப் பொறுத்த வரை தமிழ்த் தேசிய அரசியல் நியாயப்பாடுகளை புலமை நிலையில் தொகுத்து தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேசு பொருளாக்கல், தமிழ்த்தேசியப்பரப்பில் செயற்படும் கட்சிகள், பொது அமைப்புக்கள், தனி நபர்கள் என அனைத்துத் தரப்பினரையும் இணைத்து தேசியப் பேரியக்கம் ஒன்றினை உருவாக்குதல், மலையக மக்கள், தமிழக மக்கள் உட்பட உலகில் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்களையும் சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகில் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் தமிழத் தேசிய அரசியலுக்கு பின்னால் அணிதிரட்டுதல். புவிசார் அரசியலில் பங்காளிகளாக மாறுதல், சமூகமாற்ற அரசியலையும் முன்னெடுத்தல், சர்வதேச அரசியலைக் கையாளுதல், ஆக்கிரமிப்புக்களை நிறுத்துவதற்கு சர்வதேசப்பாதுகாப்பு பொறிமுறை ஒன்றினை உருவாக்குதல், மக்கள் பங்கேற்பு அரசியலை ஆரம்பித்தல், கிழக்கினைக் கையாள்வதற்கு தனியான மூலோபாயங்களையும் தந்திரோயாயங்களையும் வகுத்து செயற்படுத்தல் என்பவை முக்கியமானவையாக இருத்தல் வேண்டும்.

நான்காவது வினா கொள்கை ரீதியான ஒன்றிணைவுதான் முடிவென்றால் ஜக்கிய முன்னணியில் இணைந்து கொண்ட தரப்புக்கள் சமபங்காளிகளா? சமமற்ற பங்காளிகளா?

கொள்கை ரீதியான ஐக்கிய முன்னணி சிறப்பாக செயல்படுவதற்கு மூன்று விடயங்கள் அவசியமானவை. ஒன்று கொள்கை ஒருமைப்பாடும் அதில் நேர்மையான உறுதிப்பாடும். இரண்டாவது சமபங்காளிகள் என்ற அந்தஸ்து. மூன்றாவது வலுவான அமைப்புப்பொறிமுறை இங்கு சமபங்காளிகள் என்ற விடயம் மிகவும் முக்கியமானது. சமபங்காளிகள் அல்லாத கூட்டு தேர்தல் கூட்டாக இருக்குமே தவிர கொள்கைக் கூட்டாக இருக்காது. இன்றைய கூட்டமைப்பின் கூட்டு தேர்தல் கூட்டுத்தான். விக்கினேஸ்வரனின் கூட்டும் தேர்தல் கூட்டுத்தான். ஜ.தே.க, பொதுஜன முன்னணி என்பவற்றின் கூட்டுக்களும் தேர்தல் கூட்டுக்கள் தான். தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க, அ.தி.மு.க, என்பவற்றின் கூட்டுக்களும் தேர்தல் கூட்டுதான். சமாங்காளிகள் என்ற அந்தஸ்து இல்லாவிட்டால் கூட்டில் இணையும்தரப்புக்கள் ஒருமித்த மனதுடன் செயல்பட மாட்டாது. இது விடயத்தில் வரலாற்று அனுபவமும் இருக்கிறது. தமிழ் அரசியல் வரலாற்றில் உருவாகிய அனைத்து ஜக்கிய முணன்னணிகளும்

தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி (1972), ஈழத்தேசிய விடுதலை முன்னணி (1985) தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (2000) தமிழ் மக்கள் பேரவை (2016) தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி (2020) என அனைத்தும் தோல்வியடைந் திருக்கின்றன. இத் தோல்விக்குக் காரணங்களாக பல இருக்கின்ற போதும் பிரதான காரணம் சம பங்காளிகள் என்ற அந்தஸ்து ஏற்கப்படாமை தான்.

தமிழ்த்தேசிய ஒடுக்குமுறை என்பது புறத்தேயிருந்து வரும் ஒடுக்குமுறை, தமிழ் மக்கள் அனைவரும் இணைந்துதான் இதற்கு முகம் கொடுக்கவேண்டும். தமிழ் மக்களுக்குள் பல்வேறு பிரிவுகள் இருக்கும். அதன் வழி பல்வேறு அரசியல் இயக்கங்கள் இருக்கும் இது தவிர்க்க முடியாதது ஆனால் பொது இலக்கினை நோக்கி அனைவரையும் அணிதிரட்டவேண்டுமென்றால் ஐக்கிய முன்னணி மூலமே அதனை சாத்தியமாக்க முடியும். தமிழ்த் தேசிய அரசியலின் பின்னடைவுக்கு வலுவான ஐக்கிய முன்னணி உருவாக்கப்படாமையும் பிரதான காரணம்.

ஐந்தாவது வினா சமபங்காளிகளாயின் ஐக்கிய முன்னணியின் உயர் பீடத்தில் வரும் பிரச்சினைகளையும் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை தயார் செய்வதில் வரும் பிரச்சினைகளையும் எவ்வாறு தீர்த்துக்கொள்வது.

கட்சிகளின் ஐக்கிய முன்னணியின் உயர் பீடமாக அரசியல் குழுவே இருக்கும். சமபங்காளிகள் என்றால் அனைத்துத் தரப்பினருக்கும் அங்கு சமவாக்குகள் இருக்கும். தீர்மானங்களை அங்கு ஏகமனதாக எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்க முடியாதபோது கட்சிசார்பற்ற மதத் தலைவர்கள், கல்வியாளர்கள் கருத்துருவாக்கிகள் கொண்ட ஒரு ஆலோசனைக்குழுவை அவை அமைத்து அதனிடம் தீர்மானம் எடுக்கும் பொறுப்பை விட்டு விட வேண்டும். அக்குழுவின் தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இடத்தில் அந்தக்குழு ஒரு நீதிமன்றமாகத் தொழிற்படும். நீதிமன்றத்தின் தீர்ப்பை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஏற்றுக் கொள்வது போல இவ்வாலோசனைக் குழுவின் தீர்மானங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆலோசனைக்குழு ஐக்கிய முன்னணியின் கொள்கை, அமைப்பு

விதிகள், தமிழ் மக்களின் நலன்கள் என்பவற்றை அளவுகோலாகக் கொண்டு தீர்ப்பினை வழங்கவேண்டும். தமிழ்த்தேசியப் பேரியக்கம் உருவாகிவிட்டால் அது உருவாக்கும் குழுவே இந்த விவகாரங்களைப் பார்த்துக்கொள்ளும்.

தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியலை தயார் செய்யும் பொறுப்பையும் ஆலோசனைக் குழுவிடம் விட்டுவிடலாம். கட்சிகள் பொது அமைப்புக்கள் தமது சிபார்சுகளை மட்டும் முன்வைக்கலாம். கட்சித் தலைவர்கள் வேட்பாளர்களாக போட்டியிட விரும்பினால் அவர்களை ஏகமனதாக தெரிவு செய்யலாம். வேட்பாளருக்கு இருக்கவேண்டிய தகமைகள் தொடர்பான ஆவணத்தை அனைத்துத் தரப்பினரும் இணைந்து தயாரித்து ஆலோசனைக் குழுவிடம் வழங்கலாம்.

ஆறாவது வினா அரசியல் கட்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது? கட்சிகள் தேர்தல் இலக்கின் அடிப்படையில் தான் செயற்படும். இதனால் நிர்ப்பந்தங்கள் வந்தாலொழிய அவை ஐக்கியத்திற்கு வரமாட்டா. வந்தாலும் சம பங்காளிகள் என்ற நிலையை பெரிய கட்சிகள் எனக் கருதுபவை ஏற்றுக்கொள்ளமாட்டா. அவை எப்போதும் தங்கள் ஆதிக்க நிலையை நிலை நிறுத்தவே விரும்பும். ஆனால் கட்சிகளின் பலவீனம் மக்களைப் பொறுத்துத்தான் இருக்கின்றது. மக்களின் கருத்துநிலை வலுவாக இருந்தால் அதற்கு அடிபணிவதைத்தவிர அவற்றிற்கு வேறு தெரிவில்லை. மக்களை இன்னோர் தளத்தில் அணிதிரட்டுவதுதான் ஒரே வழி. கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ்த்தேசியத்தளம் ஒன்றினை கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர்கள் இளைஞர்கள் என்போர் தலைமையில் உருவாக்குவதன் மூலம் இதனை சாத்தியமாக்க முடியும்.

தமிழ் மக்கள் பேரவை அந்த அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டது. பொது அமைப்புக்களையும், அரசியல் கட்சிகளையும் இணைத்த ஒரு அரசியல் இயக்கமாக அது தோற்றம் பெற்றது. அங்கு பொது மக்கள் தரப்பு பெரிய சக்தியாக இருக்கவில்லை. எழுக தமிழ் போன்ற பிரமாண்டமான நிகழ்வை அரசியல் கட்சிகளே வெற்றிகரமாக்கின. இறுதியில் தேர்தல் வந்தபோது கட்சி முரண்பாடுகள் வலுப்பெற்று தமிழ் மக்கள் பேரவை பலவீனமடைந்தது. எனவே தமிழ்

மக்கள் பேரவை தந்த படிப்பினை பொதுமக்கள் தரப்பினை பலப்படுத்திக் கொண்டுதான் அரசியல் கட்சிகளை இணைக்கவேண்டும் என்பதே

எனவே முதலில் கல்வியாளர்கள் சமூகப் பெரியார்கள், மதத் தலைவர்கள் அடங்கிய குழுவொன்றை அமைத்தல் வேண்டும். அக்குழு தமிழ் மக்களின் அரசியல் இலக்கினையும், வழி வரைபடத்தையம் தெளிவாக வரையறுத்து ஆவணம் ஒன்றினை தயாரிக்க வேண்டும். இந்த ஆவணத்தை அடிப்படையாக வைத்து பொது அமைப்புக்களுடனும் சமூக ஆர்வலர்களுடனும் வலுவான உரையாடல் நடாத்தி கட்சி சாரா மக்கள் இயக்கமொன்றிற்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும். இது முதலாவது கட்டம். இரண்டாம் கட்டத்தில் வெகுஜனங்களை அணிதிரட்டுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். இதன் பின்னர் வலுவான நிலையில் இருந்து கொண்டு மூன்றாம் கட்டத்தில் அரசியல் கட்சிகளுடன் ஐக்கிய முண்னணி அமைத்து ஒரு தேசியப் பேரியக்கத்தை உருவாக்கலாம்.

ஏழாவது வினா மக்கள் பங்கேற்பு அரசியல் வளர்ச்சியடையாத எமது சமூகத்தில் மக்கள் அமைப்புக்களை எப்படி வளர்த்தெடுப்பது? இது ஒரு சவாலான காரியம் தான். எமது அரசியல் வரலாற்று ரீதியாக மூன்று விடயங்களில் தோல்வியடைந்திருக்கின்றது. ஒன்று மக்கள் பங்கேற்பு அரசியல். இரண்டாவது ஐக்கிய முன்னணியை உருவாக்குதல். மூன்றாவது கிழக்கைக் கையாளுதல். இதில் மக்கள் பங்கேற்பு அரசியல் என்பது மிகவும் முக்கியமானது இங்கு மக்கள் பங்கேற்பு அரசியல் என்பது மக்களை அரசியல் மயப்படுத்தி அமைப்பாக்குவதே!

தமிழரசுக் கட்சிக் காலத்தில் தொண்டர்கள் பங்கேற்றனர். மக்கள் வாக்களிப்பதோடு தமது கடமையை நிறுத்திக் கொண்டனர். விடுதலைப் போராட்ட காலத்தில் போராளிகள் பங்கேற்றனர். மக்கள் நிதியும் நகையும் வழங்குவதோடு தமது கடமைகளை நிறுத்திக் கொண்டனர். எனினும் பேரணிகள் உட்பட மக்கள் போராட்டங்களுக்கு அழைப்புவிடுத்த போது அவர்கள் பங்கேற்றனர். இச் சந்தர்ப்பங்களில் மக்களை அமைப்பாக்க தலைமைகள் தவறிவிட்டன.

மக்கள் பங்கேற்பு அரசியல் வளராமையினால் ஏற்பட்ட மிகப்பெரிய விளைவு ஒரு ஜனநாயக அரசியல் இயக்கத்தை

கட்டியெழுப்ப முடியாமையே! தற்போது செயற்படும் எந்த அரசியல் இயக்கமும். வலுவான ஜனநாயகக் கட்டமைப்புக்களைக் கொண்ட அரசியல் இயக்கமாக இல்லை.

ஜனநாயக அரசியல் இயக்கம் என வரும்போது தெளிவான அரசியல் இலக்கு, வலுவான கொள்கைகள், குறுகிய கால, நீண்டகால வேலைத்திட்டங்கள், உறுதியான நிறுவனக் கட்டமைப்பு, வினைத்திறனுள்ள ஊழியர்கள், அர்ப்பணிப்பு மிக்க தலைமை என்பன அவசியமாகும். கூடவே அரசியல் திட்டம், செயல் திட்டம் பொருத்தமான மூலோபாயம், தந்திரோபாயம் என்பன இருத்தல் வேண்டும். இவற்றைவிட அமைப்பை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ஜனநாயக மத்தியத்துவம், விமர்சனம் சுய விமர்சனம், உட்கட்சிப் போராட்டத்திற்கான பொறிமுறை, சீர் செய் இயக்கம், ஊழியர் கொள்கை என்பனவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறான ஜனநாயகக் கட்டமைப்பு இருக்கும் போதே மக்கள் பங்கேற்பு அரசியல் சாத்தியமாகும். எங்களால் இயலுமோ இல்லையோ ஒரு வலுவான ஜனநாயக அரசியல் இயக்கத்தை நாம் உருவாக்கியே ஆகவேண்டும். வலுவான ஜனநாயக அரசியல் இயக்கம் இல்லாமல் அக விவகாரங்களுக்கும் முகம் கொடுக்க முடியாது. புற விவகாரங்களுக்கும் முகம் கொடுக்க முடியாது.

தமிழ் நாட்டின் செயற்பாட்டாளர் தோழர் தியாகுவை சென்னையில் ஒரு தடவை சந்தித்தபோது "வலுவான ஜனநாயக அரசியல் இயக்கத்தின் மூலமே இனிவரும் நெருக்கடிகளுக்க முகம் கொடுக்க முடியும்" என்றார். அதற்கு நான் "மக்கள் பங்கேற்பு அரசியல் மரபே எம்மிடம் இல்லாத போது எப்படி ஜனநாயக அரசியல் இயக்கத்தை உருவாக்க முடியும்" எனக் கேட்டேன். அதற்கு அவர் "தேவை தமிழ் மக்களை அதை நோக்கிக் கொண்டு செல்லும்". என்றார்.

சர்வதேச அரசியலைக் கையாள்வதற்கும் மக்கள் பங்கேற்பு அரசியல் மிக அவசியமாகும். எந்தவொரு போராட்டத்திலும் சர்வதேச அபிப்பிராயங்கள் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. இவ் விடயத்தில் அரசுகள் தங்களுடைய நலன்களை முதன்மைப்படுத்தினாலும் சர்வதேச சிவில் சமூகம் சர்வதேச விழுமியங்களுக்கேற்பவே செயற்படும். அவற்றின் செயற்பாடு தாராண்மைவாத ஜனநாயகக் கோட்பாட்டினாலேயே வழிநடத்தப்படும்.

அரசைவிட ஜனநாயக விழுமியங்களை உச்ச வகையில் பேணுவதாக நாம் காட்ட வேண்டும். மக்கள் பங்கேற்பு அரசியல் மூலமே அதனை சாத்தியமாக்கலாம்.

மக்கள் பங்கேற்பு அரசியல்தொடர்பாக தற்போதைக்கு மூன்று வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம். ஒன்று முன்னரும் கூறியது போல கல்வியாளர்கள் சமூக ஆர்வலர்கள், மதத்தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றை உருவாக்குவது. அது அரசியல் திட்ட ஆவணத்தை தயாரிக்க வேண்டும். இரண்டாவது ஏற்கனவே செயற்படுகின்ற பொது அமைப்புக்கள் ஐக்கிய முன்னணியாக இணைந்து அவற்றில் உள்ளவர்களை அரசியல் மயப்படுத்துவது. மூன்றாவது கிராம அமைப்புக்களிலுள்ள பொது அமைப்புக்களை இணைத்து அரசியல்மயப்படுத்துவது. இவ்வாறு மேலிருந்து கீழும் கீழிருந்து மேலும் செயற்படும் வேலை முறைகளை நாம் உருவாக்கலாம். கிராம மட்டங்களில் பணியாற்றும் போது முதலில் கிராம மட்ட பிரச்சினையை அடையாளம் கண்டு அதனைச் செயற்படுத்துவதினூடாக அரசியல் மயப்படுத்தலை நோக்கி முன்னேறலாம். கல்வி, கிராமிய பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற பணிகளிலிருந்து. கிராமியப் பணிகளை ஆரம்பிக்கலாம். இதன் மூலம் தமிழத்தேசிய வாழ்வு முறைக்கான அடிப்படைகளை உருவாக்கலாம்.

இங்கே இன்னோர் விடயத்தை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். அதுதான் சித்தாா்ந்த மேலாண்மை. தமிழ்த்தேசிய அரசியல் பலவருடங்கள் நடைமுறையில் இருந்தாலும் சித்தாந்த மேலாண்மையாக யாழ், சைவ, வேளாள ஆண் ஆதிக்க சித்தாந்தமே நடைமுறையில் உள்ளது. இதனால் தான் அக முரண்பாடுகள் அடிக்கடி மேலெழுகின்றன. தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாகவும் மாறவில்லை. நாம் இதற்குப் பதிலாக தமிழ்த்தேசிய சித்தாந்தத்தின் மேலாண்மையைக் கொண்டு வர வேண்டும். அந்த சித்தாந்தம் தேசியம் சமூக மாற்றம் என்கின்ற உள்ளடக்கத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

எட்டாவது, அணி திரட்டல்களை எவ்வாறு மேற்கொள்வது? என்பதாகும் அணிதிரட்டல்களை மேற்கொள்ளும் போது தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் பல்வேறு சமூகச் சக்திகளையும் நாம் அடையாளம் காணவேண்டும். தமிழ்ச் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் பிரிவினராக சாதியால் தாழ்த்தப்பட்ட மக்கள், வன்னி, கிழக்கைச் சேர்ந்த

வறிய கூலி விவசாயிகள், மீனவர்கள் உள்ளனர். இவர்கள்தான் போராட்டத்தின் வலிமையான சக்திகள். ஆயுதப் போராட்டத்தை கடைசிவரை பாதுகாத்தவர்களும் இவர்கள் தான். தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையையும் வேண்டி நிற்பவர்கள். இரண்டும் கிடைக்கும் போது தான் இவர்களுடைய நலன்கள் கை கூடக்கூடிய நிலை உள்ளது.

இவர்கள் ஒடுக்கப்பட்ட பிரிவினராக இருந்தாலும் யாழ், சைவ வேளாள ஆதிக்க சித்தாந்தமே இவர்கள் மத்தியிலும் மேல் நிலையில் உள்ளது. இதற்கு பதிலாக தேசியமும், சமூகமாற்றமும் என்ற தமிழ்த் தேசிய சித்தாந்தத்தை இவர்கள் மத்தியில் மேல் நிலைக்கு கொண்டுவர வேண்டும். இவர்களை அரசியல் மயப்படுத்துவது சற்றுக் கடினமாக இருக்கும். அதனை பூர்த்தி செய்து விட்டால் மற்ற எல்லாப்பிரிவுகளையம் விட வலிமையான சக்திகளாக மிளிர்வர்.

இரண்டாவது முக்கிய பிரிவினர் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் அறிவுத்துறையினர் ஆவர். பொதுவாக அரசியல் விழிப்புணர்வும், முற்போக்கு கருத்துகளின் பால் தீவிர ஈடுபாடும் உடைய இவர்கள் எமது சமூகத்தின் தீவிரமான இயங்கு சக்திகளாவர். இவர்கள் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களுடன் சேர்ந்து வலுவான போராட்ட குழுமத்தை உருவாக்கக் கூடியவர்கள். அரசியல் செயல்பாட்டினை இவர்களை முதலில் அணிதிரட்டிக் கொண்டு ஆரம்பிக்கலாம்.

இவர்களுக்கு ஆரம்ப அறிவூட்டலைக் கொடுக்கவேண்டும். தமிழ்த்தேசியக் கோட்பாட்டு உள்ளடக்கம், இனப்பிரச்சினை என்றால் என்ன? இன ஒடுக்குமுறை வரலாறு, தமிழ் மக்களின் போராட்ட வரவாறு, தமிழ் மக்களுக்கான அரசியல் இலக்கு, அரசியல் இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள், பிராந்திய அரசியல், சர்வதேச அரசியல் மக்கள் போராட்டம், அரசியல் இயக்கத்தின் கட்டமைப்பு, போன்றவை தொடர்பாக அறிவூட்டலை வழங்கவேண்டும். இதனை வகுப்புகளாகவும். கருத்தரங்குகளாகவும் கலந்துரையாடல்களாகவும் முன்னெடுக்கலாம்.

மூன்றாவது முக்கிய பிரிவினர் நடுத்தர மக்கள், பணக்கார விவசாயிகள் மீனவர்கள், வர்த்தகர்கள், நடுத்தர அரச உத்தியோகத்தர்கள் என்போர்களாவர். தேசிய இன ஒடுக்கு முறையினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் இவர்கள் தான். தேசிய

விடுதலை அடிப்படையில் தேசம் தனது மூலாதார வளங்கள் மீது சொந்தக் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருப்பதால் இந்தப் பிரிவினர் தமிழ்த்தேசிய அரசியலின் தீவிர ஆதரவாளர்களாவர். மூன்றாவது கட்டத்தில் இவர்களை அணிதிரட்டுவதற்கு முயற்சிக்கலாம்.

நான்காவது முக்கிய பிரிவினர் புலம்பெயர்ந்த மக்களாவர். இவர்களில் தமிழகத்தில் வாழும் மக்களைப் பொறுத்தவரை தேச விடுதலை மட்டுமே அவர்களது அவல வாழ்விற்கு முடிவு கட்டக்கூடியதாக இருக்கும். அதனால் இவர்கள் தமிழ்த்தேசிய அரசியலின் உறுதியான ஆதரவாளர்களாவர். தொழில்வள நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களைப் பொறுத்தவரை கீழ் நடுத்தர பிரிவுகள் உறுதியான ஆதரவாளர்களாவர். உயர் நிபுணத்துவ பிரிவினரின் ஒரு பகுதியினர் அமெரிக்க மேலத்தேய அரசுகளின் முகவர்களாக உள்ளனர். இவ்வாறு முகவர்களாக உள்ளவர்களை தனிமைப்படுத்த வேண்டும். முகவர்களைத் தவிர ஏனையவர்களை அணிதிரட்டலாம். ஆனாலும் தமிழ்த்தேசிய அரசியலில் ஒரு ஊசலாடும் பிரிவினராகவே இவர்கள் இருப்பர்.

ஐந்தாவது பிரிவினர் தமிழ் மேட்டுக்குடியினர் ஆவர். இவர்களும் தேசிய இன ஒடுக்கு முறையினால் பாதிக்கப்படுவதால் தமிழத் தேசிய அரசியலின் ஆதரவாளர்கள். விரைவில் சமரசத்திற்கு செல்பவர்களாக இருப்பர். இப்பிரிவினர் போராட்டத்தை கவிழ்த்துக் கொட்டாதவாறு கவனமாகக் கையாள வேண்டும்.

ஆறாவது பிரிவினர் கொழும்பை மையமாகக் கொண்ட மேட்டுக்குடிகள், வல்லரசுகளின் முகவர்களாக இருப்பவர்கள் என்போராவர். இந்த இரண்டு பிரிவினரும் தேசிய ஒடுக்கு முறைக்கு முகம் கொடுத்தாலும் இவர்களது நலன்கள் கொழும்பை மையமாகக் கொண்டதால் எப்போதும் சமரசத்திற்கு செல்லவே முயற்சிப்பர். இவர்களில் கொழும்பு இருப்பை முறித்துக் கொண்டு தாயகத்தில் இருப்பவர்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு பயனுடைய பணிகளை ஆற்றக் கூடியவர்களாக இருப்பர். கல்வி ஆற்றல், மொழி ஆற்றல், தொடர்பாடல் ஆற்றல் என்பன இவர்களிடத்தே அதிகமாக இருப்பதால் அதிக பயன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் ஏனையவர்கள் தனிமைப்படுத்த வேண்டியவர்களாவர்.

ஒன்பதாவது வினா அக முரண்பாடுகளை எவ்வாறு கையாள்வது? என்பதாகும். சாதி, மத, பிரதேச, பால் முரண்பாடுகளே அக முரண்பாடுகளாக உள்ளன யாழ், சைவ, வேளாள, ஆணாதிக்க சித்தாந்தமே இதற்கு காரணம். இந்த முரண்பாடுகளினால் நான்கு நெருக்கடிகள் உருவாகின்றன. ஒன்று இது ஒரு மனித உரிமை விவகாரம். ஒரு மக்கள் பிரிவை அந்த மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஒடுக்குவது மனித உரிமை மீறலே. தமிழர்களே தங்களுக்குள் ஒடுக்கு முறைகளை மேற்கொண்டிருக்கும் போது பேரினவாதம் ஒடுக்குகின்றது எனக் கூற முடியாது. இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடிய டாக்டர் அம்பேத்கார் காந்தியிடம் "இந்தியர்களினாலேயே நாம் ஒடுக்கப்படும் போது ஆங்கிலேயர்களினால் ஒடுக்கப்படுகின்றோம் என்ற உணர்வு வரவில்லை" எனக் கூறியிருந்தார்.

இரண்டாவது தேசம் என்பது மக்கள் திரளாகும். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞையாகும். எனவே மக்கள் ஒன்றாகத் திரள்வதற்கு தடையாக இருப்பவையெல்லாம் தேசியத்திற்கு எதிரானவையாகும். அக முரண்பாடுகள் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதற்கு தடையாக உள்ளன. இவற்றை அகற்றாமல் தேசமாகத் திரள்வது சாத்தியமல்ல .

மூன்றாவது அக முரண்பாடுகள் தமிழ் மக்கள். மத்தியில் இடைவெளிகளை உருவாக்கும். அந்த இடைவெளிகளை எதிரிகள் பயன்படுத்த முனைவர். இன்று சாதி முரண்பாடும் பிரதேச முரண்பாடும் மத முரண்பாடும் பால் முரண்பாடும் தமிழ்த் தேசியத்தின் எதிரிகள் நுழைவதற்கான பல களங்களைத் திறந்து விட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் அதனைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

நான்காவது அக முரண்பாடுகள் சர்வதேச அபிப்பிராயங்களை எமக்கு சார்பாக உருவாக்குவதில் பல தடைகளை உருவாக்கும். சர்வதேச அபிப்பிராயம் புரட்சிகர நீதிக் கோட்பாட்டினால் வழிநடாத்தப் படுவதில்லை. மாறாக ஜனநாயக நீதிக் கோட்பாட்டினாலேயே வழி நடத்தப்படுகின்றது. இந்த ஜனநாயக விழுமியங்களை அரசைவிட அதிகளவில் நாம் பின் பற்றுவதாகக் காட்டவேண்டும். எமக்குள்ளே ஒரு

பிரிவினரை ஒடுக்கிக்கொண்டு சர்வதேச அபிப்பிராயத்ததை நாம் பெற முடியாது.

சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அரசுகள் மட்டும் பங்குபெறுவதில்லை. சர்வதேச சிவில் சமூகமும் பங்கு பெறுகின்றது. அரசுகள் தங்களுடைய நலன்களிலிருந்து செயற்பட்டாலும் சர்வதேச சிவில் சமூகம் சர்வதேச ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையிலேயே செயற்படும். அவை அரசுகளுக்கும் அழுத்தம் கொடுக்கக் கூடிய வல்லமையைக் கொண்டது. இன்று சர்வதேச சிவில் சமூகத்தின் அபிப்பிராயம் தமிழ் மக்களுக்கு சார்பாக உள்ளது. பெரும் தேசியவாத ஒடுக்கு முறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அக முரண்பாடுகள் பெரிதாக வளரின் தமிழ் மக்களுக்கு சார்பான சர்வதேச அபிப்பிராயங்களுக்கு சர்வதேச சிவில் சமூகம் ஒத்துழைக்காது. சர்வதேச சிவில் சமூகத்தில் ஜனநாயக முற் போக்கு சக்திகள், மனித உரிமைவாதிகள், ஊடகத்துறையினர் ஆன்மீகத்துறையினர் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாக மாறும்போதே அக முரண்பாடுகளை எம்மால் கடக்கமுடியும். அக முரண்பாடுகளில் சாதி முரண்பாட்டையும் பிரதேச முரண்பாட்டையும் இல்லாமல் செய்யவேண்டும். மத முரண்பாட்டிலும் பால் முரண்பாட்டிலும் சமத்துவத்தைப் பேணுதல் வேண்டும். எமது நிலம், எமது மொழி, எமது கலாச்சாரம், எமது பொருளாதாரம், எமது மக்கள் என்ற நிலை மேல்நிலைக்கு வரும் போது தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாக பரிணமிக்கத்தொடாங்கும். சீனத்தேசியம், யூதத் தேசியம், முஸ்லீம் தேசியம் என்பன ஒரு வாழ்வு முறையாக பரிணமிக்கும் போது தமிழ்த் தேசியம் மட்டும் ஏன் அவ்வாறு பரிணமிக்க முடியாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அக முரண்பாடுகளைக் களையும் ஆற்றல் தமிழ்த்தேசியத்திற்கு மட்டுமே உண்டு. மக்களைத் திரளாக்கல் என்ற பெருந்தேவை அதற்குள்ளது.

பத்தாவது வினா பிராந்திய, சர்வதேச அரசியலைக் கையாள்வது எவ்வாறு? என்பதாகும். இங்கு பிராந்திய அரசியலைக் கையாள்வதே மிகவும் முக்கியமானதாகும். சர்வதேச அரசியல் சக்திகளில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் பிராந்திய அரசியல் சக்தியான

இந்தியாவை அனுசரித்தே இலங்கைத் தீவை கையாளும். சீனா தானே நேரடியாக கையாள முயற்சிக்கும். சிறீலங்கா அரசு சீனா பக்கம் சாய்ந்திருப்பதால் தமிழ்த்தரப்பு அமெரிக்க - இந்தியக் கூட்டையே அதிகம் கையாள வேண்டியிருக்கும். அதுவும் குறிப்பாக இந்தியாவையே கையாள வேண்டியிருக்கும். இன அழிப்புக்கான சர்வதேச நீதி கோருவதற்கு அமெரிக்க தலைமையிலான மேற்குலகத்தை அதிகம் கையாள வேண்டியிருக்கும்.

இலங்கைத் தீவில் செல்வாக்குச் செலுத்துவதற்கு அமெரிக்க - இந்தியக் கூட்டு இந்தோ பசுபிக் மூலோபாயத்திட்டத்தையும், சீனா பட்டுப்பாதைத் திட்டத்தையும் முன்னெடுக்கின்றது. இது பற்றி முன்னரும் கூறப்பட்டுள்ளது. இங்கு அமெரிக்க தனித்து நேரடியாக கையாளாமல் இந்தியாவுடன் இணைந்து கையாள்வதன் மூலம் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. இதன் மூலம் இலங்கை விவகாரத்தில் இந்தியாவை பகைத்துக் கொண்டு எதையும் செய்வதற்கு அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் தயாராக இல்லை என்பதே வெளிப்படுத்தப்படுகின்றது. இதனால் தான் இந்தியாவைக் கையாள வேண்டிய தேவை தமிழ்த்தரப்பிற்கு அதிகம் நேருகின்றது.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்த வரை அமெரிக்காவிற்கு கேந்திரப்பிரச்சினை மட்டும் தான். ஆனால் இந்தியாவிற்கு கேந்திரப்பிரச்சினையுடன் தேசிய பாதுகாப்புப் பிரச்சினையும் உண்டு. ஒப்பீட்டு ரீதியில் அதற்கு தேசிய பாதுகாப்பு பிரச்சினையே முதன்மையானது. இது பிரித்தானிய இந்தியாவிலிருந்து தொடருகின்ற ஒன்றாகும். பிரித்தானிய இந்தியாவின் பாதுகாப்புக் கொள்கையின் படி இலங்கைத்தீவு இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள்ளேயே உள்ளது. அதனால் இலங்கையின் விவகாரங்களை இந்தியா தனது சொந்த நாட்டின் பிரச்சினையாகவே பார்க்கும்.

இந்தியாவிற்கு மேற்கு, வடக்கு, வடகிழக்கு என ஒரு வில் போல பாதுகாப்புப் பிரச்சினை உண்டு. இதனால் தனது பாதுகாப்பு மையங்கள் பலவற்றை தெற்கிலேயே நிறுவியுள்ளது. தமிழ் நாட்டில் அது குறைவு. கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களில் அதிகம் உள்ளன. பாதுகாப்பு விவகாரத்துறையிலும், வெளிவிவகாரத்துறையிலும்

கேரளக்காறர்கள் அதிகளவில் பணியாற்றுகின்றனர். இலங்கையில் இந்தியாவிற்கு எதிரான சக்திகள் காலூன்றினால் இந்தியாவுக்கு இந்தப் பாதுகாப்பு மையங்களுக்கெல்லாம் நெருக்கடி ஏற்படும். இதனை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றவும் முடியாது. மாற்றுவதற்கு பாதுகாப்பான இடங்களும் குறைவு.

இந்த நிலமைகள் காரணமாக இலங்கை மீது இந்தியா அதிக கவனம் செலுத்துகின்றது. இந்தியாவைப் பொறுத்த வரை அதற்கு இலங்கைத்தீவு முழுவதும் தேவை. தனிநாட்டுக் கோரிக்கைகளை ஆதரிக்காமைக்கு பிரதான காரணம் இது தான். தமிழ் நாட்டிலும் அக் கோரிக்கை வலுப்படும் என்ற அச்சமும், இந்தியாவே தேசிய இனங்களின் சிறைக் கூடமாக இருக்கின்ற நிலையும் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்ப்பதற்கான துணைக் காரணங்களாக இருந்திருக்கின்றன. தனி நாட்டுக் கோரிக்கை மட்டுமல்ல இன்று வலுவான ஒரு சமஸ்டிக்கு கூட இந்தியா தயாராகவில்லை என்பது தான் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் சோகமான விடயம். இந்தியாவின் அதி உயர்ந்த பட்ச அரசியல் தீர்வு 13 வது திருத்தம் தான். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் அபிலாசைகளை 13வது திருத்தம் சிறிது கூட திருப்திப்படுத்தப் போவதில்லை.

ஆனால் இந்தியாவின் இந்தப் போக்கு தொடர்ச்சியாக நிலைபெற முடியாது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் வலுவாக காலூன்றி விட்டது. இலங்கை விரும்பினாலும் சீனாவின் ஆதிக்கத்தை நீண்ட காலத்திற்கு கீழிறக்க முடியாது. கொரோனாவிற்குப் பின்னர் உலக ஒழுங்கு மேலும் மாற்றமடையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. சிறீலங்கா அரசினைப் பொறுத்தவரை மேலும் மேலும் சீனாவின் பக்கம் சாயக்கூடிய நிலையே உண்டு. இதனை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. தென் இலங்கையில் சீனா வலுவாக காலூன்றிய நிலையில் வடகிழக்கையாவது முழுமையாக தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டிய தேவை அதற்குண்டு பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், திருகோணமலைத் துறைமுகம் என்பவற்றிலெல்லாம் இந்தியா அக்கறைப்படுவது இதற்காகத்தான். இவற்றைவிட சம்பூர் பிரதேசம், தலை மன்னார் பிதேசம், கொக்குளாய் பிரதேசம், வடமராட்சி கிழக்குப் பரதேசம் போன்ற கேந்திரப்

பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவேண்டிய தேவை இந்தியாவிற்கு உண்டு. தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமல் வட கிழக்கில் இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியாது தவிர இன்று சிறீலங்காவின் மைய நீரோட்ட அரசியலுக்கு வெளியில் நிற்கும் சமூகப் பிரிவு தமிழ் மக்கள் தான். இதனால் தமிழ் மக்களைப் பயன்படுத்தித்தான் சிறீலங்கா அரசு மீது அதிக அழுத்தங்களை இந்தியாவினால் கொடுக்க முடியும். உண்மையில் இந்தியா தொடர்பாக தமிழ் மக்களுக்கு சார்பான பொறி இங்குதான் உள்ளது. இந்தப் பொறியை தமிழ் மக்கள் பற்றிப் பிடிக்கவேண்டும். புவிசார் அரசியலில் கௌரவமான இடத்தையும் இதற்கூடாகத்தான் பெற முடியும்.

அடுத்தது தமிழ்நாட்டின் முக்கியத்துவம் தமிழ்நாட்டின் கரிசனைகளை நீண்டகாலத்திற்கு இந்தியாவினால் தட்டிக்கழிக்க முடியாது. இன்று ஈழத் தமிழர்கள் தொடர்பாக பொதுக் கருத்தது தமிழகத்தில் வலுவாக வளர்ச்சியடைந்துள்ளது. ஈழத் தமிழர் விவகாரத் தை உலகத் தமிழர்களின் பொதுப் பிரச்சினையாக பார்க்கும் பார்வையும் அங்கு வளர்ந்துள்ளது. இதை விட புதிய தலைமுறையினர் மத்தியில் தமிழ்நாட்டிற்குரிய தமிழ்த்தேசியம் என ஒன்றும் வளரத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டு மக்களினால் ஒரு வலுவான அழுத்தத்தை மத்திய அரசிற்கு கொடுக்கமுடியும். உலகத் தமிழர்களின் ஆதரவும் வலுவாக இருக்கின்றபோது மேலும் அழுத்தங்களைக் கொடுக்கலாம். தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள மாநிலங்களில் முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் பெறுவது அழுத்தங்களைக் கொடுப்பதற்கு மேலும் உதவியாக இருக்கும். எனவே புவிசார் அரசியல், தமிழ்மக்களின் ஆதரவு, இந்திய முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு என்கின்ற அழுத்தக் கருவிகளைக் கொண்டு இந்தியாவை வழிக்குக் கொண்டுவர நாம் முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவை வழிக்குக் கொண்டுவந்துவிட்டால் அமெரிக்க தலைமையிலான மேற்குலகத்தை வழிக்குக் கொண்டுவருவது கஸ்டமான காரியமல்ல. இந்தோ-பசுபிக் மூலோபாயத் திட்டத்தை தமிழ் மக்களின் ஆதரவின்றி ஒரு அடி கூட முன்னே கொண்டுசெல்ல மேற்குலகத்தினால் முடியாது. சீனாவின் உலகளாவிய செல்வாக்கை தடுப்பதற்கும் இலங்கைத் தீவில் சீனாவின் செல்வாக்கினை

கீழிறக்கவேண்டியது அவற்றிற்கு அவசியமாகவுள்ளது. எனவே புவிசார் அரசியல், சர்வதேச சிவில் சமூகம், அமெரிக்க மக்கள் என்கின்ற கருவிகளைக் கொண்டு அமெரிக்க தலைமையிலான மேற்குலகத்தை வழிக்குக் கொண்டுவர நாம் முயற்சிக்க வேண்டும். இது விடயத்தில் புலம்பெயர் மக்களுக்கு நிறையவே பொறுப்பு இருக்கின்றது.

மொத்தத்தில் ஆயுதப் போராட்டம் கடினமானது என்பது உண்மைதான் ஆனால் அதைவிடக் கடினமானது அரசியல் போராட்டம். நாம் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன இந்தப் போராட்டத்தை நாம் நடாத்தியேயாக வேண்டும்.

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் - 2017 - நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும். சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். - கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட - கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சிகைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். - சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு - 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் - 01 - சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும் கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது - சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் - சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் - நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும் சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம் - சி.த. காண்டீபன், சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள் நிலாந்தன்
18. மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும். - சி.அ. யோதிலிங்கம்